


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சி, வளம் மீட்பு பூங்காவில் நடைபெற்ற வரும் பணிகளை இன்று (17.12.2016) நேரில் சென்று ஆய்வு செய்தார். உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.இரா.முத்துக்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 884 நாள்:17.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை இன்று (17.12.2016) நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை இன்று (17.12.2016) நேரில் சென்று ஆய்வு செய்தார்.

களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சி, நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2015-16) சாஸ்தான்குளம், மீனச்சல், முதுவள்ளிகுளம் மற்றும் பாலகுளம் ஆகிய பகுதிகயில் ரூ.50 இலட்சம் செலவில் நடைபெற்ற இணைப்பு சாலை பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சி, பசுமை வீடுகள் திட்டத்தின் (2015-16) கீழ் ரூ.2,10,000/- செலவில் இடைக்கெட்டி வீடு மீனச்சல் என்ற இடத்தை சார்ந்த திருமதி.வல்சலா என்பவரின் இடத்தில் நடைபெற்று வரும் பசுமை வீடு கட்டுமான பணிகளையும், களியக்காவிளை சந்தையிலிருந்து பெறப்படும் குப்பைகளை மக்கும் குப்பபை, மக்காத குப்பை என தனித்தனியாக பிரிக்கப்படுவதையும், வளம் மீட்பு பூங்காவில் திடக்கழிவு மேலாண்மை நிதி திட்டத்தின் கீழ் ரூ.18.75 இலட்சம் செலவில் வின்ரோ பிளாட்பாம் மற்றும் கூடை அமைக்கும் பணிகளையும் இன்று (17.12.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.இரா.முத்துக்குமார், உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) திரு.மா.மாடசாமி சுந்தரராஜ், களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு.தை.சத்தியதாஸ் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.